1971 டிசம்பர் 18]

பிட்டப்படி அதைத் துரிதமாக முடிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டின் சார்பில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. நிதிநிலே காரண மாக ஓராண்டு தள்ளிப்போட்டிருக்கிருர்கள்.

திரு. கே. ஏ. வகாப்: கல்பாக்கம் அணுமின்சக்தி நிலேயம் வந்து விட்டால் மின்சாரம் மலிவாகக் கிடைக்கும் என்கிருர்களே, அதற்கேற்ப தற்போது மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க அரசு யோசிக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மின்சாரக் கட்டணத்தைப் பற்றி ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிருர்கள்.

திரு. சு. துரைசாமி: தலேவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேறியதற்குப் பின்னுல்-கிட்டத்தட்ட 1980-ம் ஆண்டு என்று எடுத்துக்கொண்டால் நமது நாட்டிற்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும்? அணுமின்சக்தி பிற்காலத்தில் போதிய அளவிற்கு இருக்குமா ? இல்லாவிட்டால் அதற்காக எடுக்கப்படு கின்ற நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலேவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் கூறியிருக்கிறேன். இருபது ஆண்டுக் காலம் அல்ல. பத்தாண்டுகாலத்திற்குள்ளாகவே பற்ருக்குறை ஏற்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலேவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின்சக்தி நிலேயம் முதல்பிரிவு 1975-ல் வேலேயைத் தொடங்கும் என்று குறிப்பிட்டார்கள். ஆனுலும்கூட இப்போது அதிகமான அதிகாரிகளேப் போட்டு, வேலேகளேத் துரிதப் படுத்த வேண்டுமென்று மத்திய அரசு கருதியிருக்கிறது. ஆகவே, 1974-க்கு முன்னுலே முதல் யூனிட் வேலேயைத் தொடங்க நம் அரசு மத்திய அரசை வேண்டிக்கொண்டு தகுந்த நடவடிக்கைகளே எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலேவர் அவர்களே, இப்போது ஓராண்டுக்குத் தள்ளிப்போட்டதைக்கூட, நாம் விரும்பாமல், வேலேகளேத் துரிதப்படுத்த வேண்டுமென்று நாம் சொல்லி வருகிருேம்.

Rural electrification

*** 589 *Q*.—DR. H. V. HANDE:** Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the rural electrification scheme for all the villages in Tamil Nadu would be completed before the end of 1972 ; and

(*b*) if not, the probable date on which the scheme is likely to be completed?

[1971 டிசம்பர் 18

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிக்கப்படும் என்று சொல்லுகின்ற நேரத்தில், ஏற்கெனவே மின் இணைப்பு கொடுக்கப் பட்ட கிராமங்களில் மின்சாரம் சரியான அளவில் கிடைக்க வில்லையென்கிற புகார்கள், குறைகள் நீக்கப்படுமா ? ஏற்கெனவே மின் இணைப்பு கொடுக்கப்பட்ட கிராமங்களிலுள்ள புகார்கள் நீக்கப்படுமா? . . . .

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member put the question.

DR H. V. HANDE : Sir, I want my point to be clearly understood by the Hon. Minister and so I do not want to be brief . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி இவ்வளவு விரிவாக இருந்தால் என்ன அர்த்தம்? சுருக்கமான கேள்வியாகப் போடுங்கள்.

DR. H. V. HANDE : So, is it possible for the Hon. Minister to see that in villages where electric connection has already been given there is no reduction in the quantum of electricity and also places nearby would get electricity ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, கேள்வி யிலேயே 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படுமா ? என்று கேட்டிருக்கிறீர்கள். 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்து மின்வசதி செய்து கொடுக்கப்பட்டுவிடும். ஏற்கெனவே சீரமைப்பு பற்றி 50 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் நல்ல முறையில் அமைத்திருக்கிறோம். ஆங்காங்கு வேண்டிய டிரான்ஸ்ஃபார்மர்களைப் பொருத்தும் போது இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் நீங்கிவிடும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கும்போது தெருவிளக்குகள் சரியாக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இதில் காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, 1972-க்குள் எல்லாம் சரியாக நடைபெறும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பல்லடம் தாலூகாவில் பல ஊர்களில் மின்சாரப் பூர்த்தி விழா கொண்டாடப் படுகிறது. பல கிராமங்களில் அரிசனச் சேரிகளுக்கு இன்னும் தெரு

துங்கபுரம் சிறுநில விவசாயச் சங்கத் தலைவரிடம் இருந்து ஒரு மனுவும் வரவில்லை என்று வருவாய் வாரியம் (உணவு உற்பத்தி), மற்றும் வேளாண்மை இயக்குநர் சொல்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட மனுவின் நகல் ஒன்றை அனுப்பித்தர ஏற்பாடு செய்தால் அதனை அரசு பரிசிலனை செய்யும்.

பலாப்பழம் ஏற்றுமதி

*** 585. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பலாச்சுளையைப் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

அரசு எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை

*** 586. வினா—திரு. கே. ஏ; வகாப் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் மவுண்ட் ரோட் அரசாங்க எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது லாபத்தில் செயல்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) சென்னை அண்ணா சாலை (மவுண்ட் ரோட்) அரசாங்க எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை ஒன்று 1968-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(இ) விவசாயத்திற்கு ஏற்ற நீர் இவ்விடத்தில் கிடைப்பதில் ஏற்பட்ட கஷ்டங்கள் காரணமாக 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் இக் காய்கறிப் பண்ணை மூடப்பட்டது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அப்படி அமைக்கப் பட்ட அந்தக் காய்கறிப் பண்ணையில் ஸ்ப்ரிங் மூலம் நீர் பாய்ச்சும் முறை கையாளப்பட்டதே, ஆராய்ச்சி மூலம் அந்த முறையாவது பயனுடையதாகக் கருதப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பண்ணையில் நீர் இறைக்க ஸ்ப்ரிங்கிளிங் முறை கையாளப் பட்டது. ஸ்ப்ரிங்கிங் முறைதான் வெற்றி பெற்றது. பண்ணை வெற்றி பெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கவர்ன்மெண்டு எஸ்டேட்டுக்குள் ஒரு காய்கறிக்கடை இருக்கிறது. அங்கே வாடி வதங்கிப்போன காய்கறிகள்தான் இருக்கின்றன. இப்படி ஒரு கடை அங்கே